**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8040837

1. District : மாவட்டம் Tirunelveli PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2023 FIR No. மு.த.அ. எண் 07/2023 Date: நாள் 21.09.2023

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7 (a)

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 20.09.2023 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 13.00 hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.09.2023 Time : நேரம் 08.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.09.2023 Time : நேரம் 08.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25 Km North.

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி V.A.O office, Gangaikondan, Tirunelveli District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.Puthumadasamy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.Mariappan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15.08.1981 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி 95/3 South Street, Vadakarai, Gangaikondan Village.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt.Lingammal, Firka Surveyor, Gangaikondan, Tirunelveli Taluk, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 21.09.2023-ம் தேதி காலை 08.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ராபின் ஞானசிங் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.M.புதுமாடசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட கங்கைகொண்டான் குறுவட்ட சர்வேயர் திருமதி.லிங்கம்மாள் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 21.09.2023-ம் தேதி 08.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2023 u/s 7(a) of PC (Amendment) Act, 2018 என வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் M.புதுமாடசாமி, வயது.43. த/பெ.திரு.S.மாரியப்பன், கதவு எண்.95/3, தெற்கு தெரு, வடகரை, கங்கைகொண்டான் கிராமம், திருநெல்வேலி தாலுகா, திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருநெல்வேலி. ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் தேங்காய்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Puthumadsam.
21/9/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21/09/2023 at 09.00 hrs

Name: பெயர் D. Robin Gnana Singh
Rank: நிலை Inspector of Police, No. எண் ...
VAC, Tirunelveli

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 07.08.2023-ம் தேதி கங்கைகொண்டான் கிராம அயன் புஞ்சை சர்வே எண்.90/1A-ல் அமைந்துள்ள 26 செண்ட் புஞ்சை இடத்தை திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், காருகுறிச்சி கிராமம், கீழகிராமம், கதவு எண்.2/121 முகவரியில் வசித்து வரும் திரு.சோமசுந்தரம் (லேட்) அவர்களின் மகன் முத்தையா என்பவரிடமிருந்து கங்கைகொண்டான் சார்பதிவக கிரைய ஆவண எண்.2097/2023-ன் படி வாங்கியிருந்தேன். மேற்படி திரு.முத்தையா என்பவரிடமிருந்து எனக்கு தம்பி முறைகொண்ட எனது சித்தப்பா மகன் மகாராஜன் என்பவரும் அதேபோல் 26 சென்டு இடம் வாங்கியிருந்தார். கிரைய ஆவணம் பதியும்போது பட்டா மாறுதலுக்கான விண்ணப்பமானது அனுப்பப்பட்டுள்ளதாக எனது செல்போனுக்கு (9842972224) குறுஞ்செய்தி வந்திருந்தது. இந்நிலையில் கடந்த 19.9.2023-ம் தேதி எனது தம்பி மகாராஜன் என்பவர் எனது உடன்பிறந்த அண்ணன் அருணாச்சலம் என்பவரை சுமார் 12.30 மணியளவில் போனில் தொடர்பு கொண்டு, எங்களது பட்டா மாறுதல் சம்பந்தமாக கங்கைகொண்டான் பிர்கா சர்வேயர் திருமதி.லிங்கம்மாள் என்பவர் சில ஆவணங்களை கேட்பதாகவும், உடனே அவரை பார்க்கும்படியும் சொன்னதை எனது அண்ணன் என்னிடம் தெரிவித்தார். அதன்படி நானும், எனது அண்ணன் அருணாச்சலம் மற்றும் எனது தம்பி மகராஜனும் கங்கைகொண்டான் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் இருந்த பிர்கா சர்வேயர் திருமதி.லிங்கம்மாளை மதியம் சுமார் 1 மணியளவில் நேரில் சென்று பார்த்தோம். அவ்வாறு நாங்கள் பார்த்த போது எங்கள் இரண்டுபேருடைய பத்திர நகல், முன்பத்திர நகல் மற்றும் 1975-ம் வருடம் முதல் தற்போது வரையுள்ள வில்லங்கசான்று ஆகியவற்றை உடனே நகல் எடுத்து தரும்படி கேட்டார்கள். அதன்படி நாங்கள் மேற்படி சர்வேயர் திருமதி.லிங்கம்மாள் எங்களிடம் கேட்ட ஆவணங்களின் நகல்களை நகல் எடுத்து கொடுத்தோம். நாங்கள் கொடுத்த ஆவணங்களின் நகல்ளை பெற்றுக் கொண்ட பிர்கா சர்வேயர் திருமதி.லிங்கம்மாள் ஆவணங்களை பார்த்துவிட்டு சொல்கிறேன் என்றும், மறுநாள் (20.9.2023) அவர்களை அலுவலகத்தில் நேரில் வந்து பார்க்கும்படி கூறியதன் பேரில் நாங்கள் மூன்று பேரும் வீட்டிற்கு சென்றுவிட்டோம். எனது தம்பி மகாராஜன் வேலை விஷயமாக நேற்று (20.9.2023) மதுரைக்கு போய்விட்டான். நானும் எனது அண்ணன் அருணாச்சலமும் மேற்படி பிர்கா சர்வேயர் திருமதி.லிங்கம்மாள் கூறியபடி நேற்று 20.9.2023-ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் கங்கைகொண்டான் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் இருந்த பிர்கா சர்வேயர் திருமதி.லிங்கம்மாளை நேரில் சென்று பார்த்தோம். அப்போது அவர் எனது பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு தனக்கு ரூ.30,000/- (முப்பதாயிரம்) கொடுக்க வேண்டும் என்றும், பணம் கொடுத்தால் உடனே மாற்றம் செய்து தருகிறேன். அதனால் பெண்டிங் கிடக்கிறது என்றும் சொன்னார். நான் அவ்வளவு பணம் எங்களிடம் இல்லை, கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதற்கு, ரூ.3,000/- குறைத்து கொடுங்கள் என்று சொன்னார். அப்போது என்னுடன் இருந்த எனது அண்ணன் அருணாச்சலம் பிர்கா சர்வேயரிடம் மேடம் அவனே கஷ்டப்படுகிறான், லோனுக்குத்தான் அவன் ஏற்பாடு செய்கிறான் என்று சொன்னதற்கு பிர்கா சர்வேயர் திருமதி.லிங்கம்மாள் எங்களிடம் ரூ.25,000/- தந்தால் தான் பட்டா பெயர் மாற்றத்திற்கு ஏற்பாடு செய்ய முடியும் என்றும்,

அதனை நாளை 21.09.2023 இதே நேரம் என்னிடம் வந்து தாருங்கள் என்று கூறிவிட்டார். நாங்களும் வேறு வழியின்றி அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். பின்பு நான் யோசித்து பார்த்தபொழுது பட்டா மாறுதல் ஏற்பாடு செய்யும் அரசு வேலை செய்வதற்கு லஞ்சமாக ரூபாய் ரூ.25,000/- கேட்கிறாரே என்று எனது மணம் கஷ்டப்பட்டது. அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே இன்று 21.9.2023-ம் தேதி இது சம்மந்தமாக புகார் மனு கொடுக்கிறேன். என்னிடம் பட்டா பெயர் மாற்றத்திற்கு ஏற்பாடு செய்ய லஞ்சம் கேட்ட பிர்கா சர்வேயர் திருமதி.லிங்கம்மாள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd.(M.Puthumadasamy), 21.9.2023. அறிவேன் சாட்சி sd.(M.Arunachalam) 21.09.2023.

Sir, Received the complaint today on 21.09.2023 at 08.00 hrs and conducted confidential enquiry and found prima facie, hence informed the matter to the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai, obtained permission and I registered a case in Tirunelveli V&AC Cr.No.07/2023 u/s 7(a) of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 21.09.2023 at 08.30 hrs. sd.D.Robin Gnanasingh, 21.09.2023. Inspr. of Police, V&AC, TIN.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

[signature] 21/9/2023
Inspr. V&AC,
TIN.